பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

13 08 2024 **TUESDAY** **6.45 AM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- ஒளிபரப்பு சேவைகள் வரைவு மசோதா குறித்த பரிந்துரைகளை வழங்க வரும் அக்டோபர் 15-ஆம் தேதிவரை கால நீட்டிப்பு அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- நாட்டின் நேரடி வரி வசூல் கடந்த ஏப்ரல் முதல், இம்மாதம் 11-ஆம் தேதிவரை 24 சதவீதம் உயர்ந்து, எட்டு லட்சத்து 13 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.
- தமிழகத்தில் அடுத்த இரண்டு தினங்களுக்கு கனமழைக்கான ஆரஞ்ச் எச்சரிக்கை விடப்பட்டிருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- பாரிஸ் ஒலிம்பிக்கில் தகுதி நீக்கத்தை எதிர்த்து, இந்திய மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் செய்த மேல் முறையீட்டில் சர்வதேச விளையாட்டு தீர்ப்பாயம் இன்று தீர்ப்பளிக்கவுள்ளது.
- பிரசார் பாரதியுடன் இணைந்து, **Big** கிரிக்கெட் லீக் டுவென்டி – டுவென்டி போட்டிகள் வரும் செப்டம்பர் மாதம் லக்னோவில் தொடங்கவுள்ளன.

*-- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>>

ஒளிபரப்பு சேவைகள் வரைவு மசோதா குறித்த பரிந்துரைகளை வழங்க வரும் அக்டோபர் 15-ஆம் தேதிவரை கால நீட்டிப்பு அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்த மசோதா விரிவான ஆலோசனைக்கு பின்னர் வெளியிடப்படும என்று தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் மற்றும் மசோதாவுடன் தொடர்புடையவர்களின் விளக்கத்துடன் ஆலோசனைகளை வழங்குவதற்காக இந்த வரைவு மசோதா கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வெளியிடப்பட்டது.

இதுதொடர்பாக, பல்வேறு பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகள் வரப்பெற்றிருப்பதாகவும் தெரிவித்துள்ள அந்த அமைச்சகம், விரிவான ஆலோசனைகளுக்கு பின்னர் வரைவு மசோதா வெளியிடப்படும் என்று கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

நாட்டின் ஒட்டுமொத்த நேரடி வரி வசூல் கடந்த ஏப்ரல் ஒன்றாம் தேதிமுதல், இம்மாதம் 11-ஆம் தேதிவரை சுமார் 24 சதவீதம் உயர்ந்து, எட்டு லட்சத்து 13 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

கடந்தாண்டு இதேகாலத்தில் 6 லட்சத்து 55 ஆயிரம் கோடி ரூபாய் வசூலானதாக வருமானவரித்துறை தெரிவித்துள்ளது.

ஒட்டுமொத்த வரி வசூலை பொறுத்தவரை 22 புள்ளி நான்கு எட்டு சதவீதம் உயர்ந்து, ஆறு லட்சத்து 93 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்திருப்பதாக வருமானவரித்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் கடந்த பத்தாண்டுகளில் 25 கோடி பேர் வறுமை கோட்டிலிருந்து மீண்டுள்ளதாக ஆளுநர் திரு ஆர் என் ரவி தெரிவித்துள்ளார்.

ராமேஸ்வரத்தில் நேற்று கம்பன் விழாவை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

கோவிட் தாக்கத்திற்கு பின்னரும் இந்தியா பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

பொருளாதாரத்தை போலவே, நாட்டில் ஆன்மிகமும் வளர்ச்சியடைந்து வருவதாக திரு ஆர் என் ரவி குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனமான **EPFO** இன்று தனது ஐந்தாவது நேரடி பரிமாற்ற நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது.

**EPFO** உறுப்பினர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு பல்வேறு சேவைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்த நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இந்த நிறுவனத்தின் சமூக வலைதள பதிவில், நேரடியாக இந்த நிகழ்ச்சி ஒளிபரப்பப்படும் என்று மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியை மாற்றிக்கொள்ளுதல், அதற்கான நடைமுறைகள் மற்றும் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு நிபுணர்கள் அளிக்கும் பதில்கள் உள்ளிட்டவை இந்த நிகழ்ச்சியில் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

நாடுமுழுவதும் நடைபெற்று வரும் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தில் பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றனர்.

இதற்காக அஞ்சலகங்களில் தேசியக்கொடி விற்பனையும் நடைபெற்று வருகிறது.

தேசியக்கொடி ஏற்றும் இயக்கம் தொடர்பான விழிப்புணர்வு பேரணிகளும் நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர் தேசியக்கொடியை ஆர்வத்துடன் வாங்கி செல்வதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - முருகேசன் - 40 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தின்கீழ் குஜராத் மாநிலம் சூரத்தில் பொதுமக்கள் பங்கேற்ற நிகழ்ச்சிகள் பெருமை அளிக்கக்கூடியதாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சூரத்தில் மத்திய அமைச்சர் திரு நிதின்கட்கரி தலைமையில் ஏராளமானோர் தேசியக்கொடியுடன் பங்கேற்ற காணொளியை தமது சமூக வலைதளத்தில் பிரதமர் பதிவிட்டுள்ளார்.

அனைத்து நிகழ்ச்சிகளையும் சூரத் மக்கள் ஆர்வத்துடன் மேற்கொண்டிருப்பதாகவும், இல்லந்தோறும் தேசியக்கொடி நிகழ்ச்சியும் அதற்கு விதிவிலக்கு அல்ல என்றும் பிரதமர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

புவி கண்காணிப்பு **EOS** பூஜ்யம்-8 செயற்கைக்கோள், **SSLV D-3** ராக்கெட் மூலம் நாளை மறுநாள் காலை மணி 9.17-க்கு விண்ணில் செலுத்தப்படுகிறது.

சிறிய ரக செயற்கைக்கோள் செலுத்துவதன் ஒரு பகுதியாக, இந்த செயற்கைக்கோள் வடிவமைக்கப்பட்டுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

ஓராண்டு காலத்திற்கு விண்வெளியில் சுற்றிவந்து, பூமியை ஆய்வு செய்து இந்த செயற்கைக்கோள் தகவல்களை அனுப்பும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை காரணமாக, ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து 43 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக ஒகேனக்கலில் பரிசல் இயக்கவும், குளிக்கவும் தொடர்ந்து தடை நீடிப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - தருமபுரி தண்டபாணி – 46 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் அடுத்த இரண்டு தினங்களுக்கு கனமழைக்கான ஆரஞ்ச் எச்சரிக்கை விடப்பட்டிருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் ஒரு சில இடங்களில் இன்றும், நாளையும் லேசானது முதல், மிதமானது வரையிலான மழை பெய்யக்கூடும் என்று வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

சென்னையில் அதிகபட்சமாக 36 டிகிரி செல்சியஸ்ஸும், குறைந்தபட்சமாக 26 டிகிரி செல்சியஸ்ஸும் வெப்பநிலை பதிவாகும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

*இருவரிச் செய்திகள்*

ஈரான் துணை அதிபர் முகமது ஜாவத் ஜெரீப் தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

<<<<<<>>>>>>

பாலஸ்தீனத்தின் காஸா அமைதி பேச்சுவார்த்தைகள் திட்டமிட்டபடி நடைபெறும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

கிரீஸ் நாட்டில் ஏற்பட்ட காட்டுத்தீ ஏதேன்ஸ் புறநகர் பகுதிகளுக்கும் பரவியதால், நூற்றுக்கணக்கான மக்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

<<<<<<>>>>>>

இந்தியா - இலங்கை இடையேயான கூட்டு ராணுவ பயிற்சி நேற்று தொடங்கியது.

<<<<<<>>>>>>

நாட்டின் சில்லரை பணவீக்க விகிதம் 59 மாதங்களுக்கு பிறகு இந்தாண்டு ஜூலை மாதத்தில் மூன்று புள்ளி ஐந்து நான்கு சதவீதமாக குறைந்துள்ளது.

<<<<<<>>>>>>

திருவள்ளூர் மாவட்டம் ஆர் கே பேட்டை அருகே மாக்கமாம்பா புரத்தில் மக்களுடன் முதல்வர் திட்டத்தின்கீழ், பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் திரு ஆர் காந்தி வழங்கினார்.

<<<<<<>>>>>>

தனசேகரன்

நாமக்கல் மாவட்ட காவல்துறை சார்பில் காவல் கண்காணிப்பாளர் திரு ராஜேஷ் கண்ணன் தலைமையில் “போதைப்பொருட்கள் இல்லாத தமிழ்நாடு” குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

<<<<<<>>>>>>

திருவாரூர் மாவட்டத்திலிருந்து முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள விரும்புவோர் வரும் 25-ஆம் தேதிக்குள் இணையதளம் மூலம் முன்பதிவு செய்து கொள்ளலாம் என அம்மாவட்ட ஆட்சியர் திருமதி சாருஸ்ரீ தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் ஒலிம்பிக்கில் தகுதி நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து, இந்திய மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் செய்த மேல் முறையீடு தொடர்பாக சர்வதேச விளையாட்டு தீர்ப்பாயம் இன்று தீர்ப்பளிக்கவுள்ளது.

இறுதிச்சுற்றுக்கு முன்னேறிய வினேஷ் போகத் போட்டிக்கு முன்பாக 100 கிராம் எடை அதிகம் இருந்ததால், போட்டியில் பங்கேற்பதில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.

இதனால் இந்தியாவிற்கான பதக்க வாய்ப்பு பறிபோனது.

தமது தகுதி நீக்கத்தை எதிர்த்து சர்வதேச விளையாட்டு தீர்ப்பாயத்தில் வினேஷ் போகத் செய்துள்ள முறையீடு தொடர்பான விசாரணை ஏற்கனவே நிறைவடைந்துள்ளது.

**<<<<<<>>>>>>**

பிரசார் பாரதியுடன் இணைந்து, **BCL** எனப்படும் **Big** கிரிக்கெட் லீக் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டிகள் வரும் செப்டம்பர் மாதம் லக்னோவில் தொடங்கவுள்ளன.

இப்போட்டியின் மூலம் உள்ளூர் கிரிக்கெட் வீரர்களின் திறமைகள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கப்படும்.

இப்போட்டிகளை தூர்தர்ஷன் விளையாட்டு அலைவரிசை நேரடியாக ஒளிபரப்பு செய்யும் என்றும், 30 நாடுகளில் இப்போட்டிகள் ஒளிபரப்பப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அணியின் முன்னாள் கேப்டன் திலிப் வென்சர்கார் தலைமையிலான குழுவினர் இப்போட்டிகளை நடத்துவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>>**

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் வெண்கலம் வென்ற இந்திய ஹாக்கி அணி, சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பு வெளியிட்டுள்ள தரவரிசைப்பட்டியலில் இரண்டு இடங்கள் முன்னேறி ஐந்தாவது இடத்தை பிடித்துள்ளது.

இந்திய அணி 2 ஆயிரத்து 848 புள்ளிகளுடன் இந்த இடத்தை பிடித்துள்ளது.

நெதர்லாந்து அணி முதலிடத்திலும், ஜெர்மனி இரண்டாவது இடத்திலும், இங்கிலாந்து மூன்றாவது இடத்திலும் உள்ளன.

<<<<<<>>>>>>